முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை தொடர்பாக உள்ளாட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் கருத்துரு பெறப்பட்டபின், அவசியம் இருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

நவதானிய சேமிப்புக் கிடங்கு

***1035—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, மேல்மொணவூர் ஊராட்சியில் நவதானிய சேமிப்புக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அணைக்கட்டு தொகுதி, மேல்மொணவூர் ஊராட்சியில் நவதானிய சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தியாகத்தாலும், உழைப்பாலும் வரலாற்றில் மாற்றத்தை உருவாக்கிவரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பெருமை மிக்க இந்த அவையில் பணியாற்ற என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அணைக்கட்டு தொகுதி கிராமங்கள் நிறைந்ததும், விவசாயத்தை நம்பியிருக்கின்ற தொகுதியும் ஆகும். விவசாயிகள் விளைவிக்கின்ற விளைபொருட்கள் மற்றும் நவதானியங்களை வேலூர் மார்க்கெட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. நவதானியங்களை சேமித்து வைப்பதற்கென கிடங்கு இல்லாததால், இந்தத் தொகுதியில் நவதானிய சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களின் சேமிப்புக் கொள்ளளவை 12,47,000 மெட்ரிக் டன்னிலிருந்து ரூ.862 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டில் 21,14,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இப்பேரவைக்கு பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்லாமல், மத்திய அரசு ஒவ்வோர் ஆண்டும் சேமிப்புக் கிடங்குகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து, சிறப்பாகச் செயலாற்றிய நிறுவனங்களுக்கு பரிசுகளை வழங்கி வருகிறது. இந்திய அளவில் 2013 ஆம் ஆண்டில் சிறந்த

செயல்பாட்டிற்காக வழங்கப்பட்ட மத்திய அரசின் முதல் 3 பரிசுகளையும், 2 சிறப்புப் பரிசுகளையும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனங்களே பெற்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2014 ஆம் ஆண்டிலும் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட முதல் 3 பரிசுகளும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனங்களுக்கே கிடைத்துள்ளன என்பதையும் பெருமகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தமிழகத்தின் உணவுத் துறை வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் மேல்மொணவூர் என்கிற இடத்தில் சேமிப்புக் கிடங்கு கட்டித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அணைக்கட்டு தொகுதியில் வரதலாம்பட்டு என்ற இடத்தில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூ.2 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கிடங்கு கட்டப்படவுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேல்மொணவூர் ஊராட்சி, அணைக்கட்டிலிருந்து 20 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அணைக்கட்டிலிருந்து 8 கி.மீ. தொலைவில் இருக்கின்ற, நான் தற்பொழுது குறிப்பிட்ட வரதலாம்பட்டு பகுதியில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு உடனடியாகக் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட வரதலாம்பட்டு கிராமத்தில் நவதானியக் கிடங்கு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

போக்குவரத்து நெரிசல் நிறைந்த பகுதியான வேலூர், மண்டித் தெருவில் சில்லறை மற்றும் மொத்த நவதானிய வியாபாரிகளுக்கு,

2016 ஆகஸ்ட் 9]

அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மேல்மொணவூரில் சங்கத்தின் சார்பில் இடம் வாங்கி வைத்துள்ளார்கள். வேலூர், மண்டித் தெருவில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மேல்மொணவூரில் மேலும் ஒரு நவதானிய சேமிப்புக் கிடங்கை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், காட்பாடி, இராணிப்பேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர், ஆற்காடு, நாட்ராம்பள்ளி மற்றும் அணைக்கட்டு ஆகிய தொகுதிகளில் 36,000 மெட்ன் கொள்ளளவில் 34 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது தமிழக வரலாற்றில், வேலூர் மாவட்டத்தினுடைய வரலாற்றில், ஒரு மைல் கல் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, தேவையின் அடிப்படையில் எங்கெல்லாம் கிடங்குகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் கிடங்குகள் கட்டித்தர வேண்டும் என்பது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலையாய உத்தரவு என்பதையும், தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்படும் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.